செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 480 நாள் : 10/8/20

# செய்தி குறிப்பு

## புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) மூலம் அனைத்து உற்பத்தி மற்றும் சேவை தொழில்கள் துவங்கிட ஓர் அரிய வாய்ப்பு

தமிழக அரசால் படித்த இளைஞர்களுக்கு புதியதாக உற்பத்தி மற்றும் சேவை தொழில் நிறுவனங்கள் அமைக்க புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் **(NEEDS)** -New Entrepreneur-cum-Enterprise Development scheme) என்கின்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நடப்பு ஆண்டான 2017-18ல் வேலூர் மாவட்டதில் 49 தொழில் முனைவோர்கள் அதிக பட்சமாக ரு.1.00 கோடி வரையுள்ள அனைத்து உற்பத்தி மற்றும் சேவை தொழில் நிறுவனங்கள் நிறுவ கடன் பெறும் தொழில் முனைவோர்களுக்கு கடன் உதவி அளிப்பதற்கு ரு.490.00 லட்சம் இலக்கு தமிழக அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்துக்கான திட்ட ஒதுக்கீடு மற்றும் இலக்கீட்டில் 50% மகளிர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்கண்ட புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்(NEEDS)மூலம் புதியதாக உற்பத்தி மற்றும் சேவை தொழில் நிறுவனங்கள் அமைக்க படித்த இளைஞர்கள் முன்வந்தால் அதிக பட்சமாக ரு.1.00 கோடி அதற்கு மேலும் வங்கிகள் மூலம் மானியத்தடன் கூடிய கடன் பெற வழி வகை செய்யப்படும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொழில் முனைவோர்கள் கூட்டாகவும் தொழில் நிறுவனம் தொடங்க இத் திட்டத்தின் மூலம் மான்யத்துடன் கூடிய கடன் பெற வழி வகை செய்யப்பட்டுள்ளது.

1. விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகள்:

- வயது வரம்பு : விண்ணப்பிக்கும் தேதி அன்று 21 வயது முடிவடைந்தவராக இருக்கவேண்டும். பொதுப் பிரிவினரை சார்ந்தவராக இருப்பின் 35 வயதிற்கு மிகாதவராகவும், சிறப்புப்பிரிவினரைச் சார்ந்தவர்களாக ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்,/ பிற்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்பட்டவகுப்பினர்/சிறுபான்மையினர்/ முன்னாள் இராணுவத்தினர்/ திருநங்கையர்/ மாற்றுத் திறனாளிகள்/பெண்களுக்கு வயது வரம்பு 45 வயதிற்கு மிகாதவராக இருத்தல் வேண்டும்.
- கல்வி தகுதி: பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு, ITI/ அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநிறுவனங்கள் மூலம் பெற்பட்ட தொழில் பயிற்சி (Vocational Training) பெற்ற முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள்.

- வசிப்பிடம் : விண்ணப்பதாரர் தமிழ் நாட்டில் கடந்த 3 ஆண்டுகளாக தொடர்ந்து வசிப்பவராக இருக்க வேண்டும்.

2. திட்ட மதிப்பீடு

- திட்ட மதிப்பீடு ரு.5.00 லட்சத்திற்கு மேல் ரு.1.00 கோடி அதற்கு மேலும் இருக்க வேண்டும்.
- தொழில் முனைவோர் நிலம்- வாடகை/குத்தகையில் இயங்கிவரும் கட்டிடத்தின் மதிப்பு /முலதனத்திற்கான விளிம்புத் தொகை மற்றும் ஆரம்ப கட்ட செலவினங்கள் இவை அனைத்தையும் தமது சொந்த செலவில் மேற்கொள்ள வேண்டும்.புதியதாக வாங்கப்படும் நிலம் மற்றும் அதில் கட்டப்படும் கட்டிட மதிப்பு திட்ட மதிப்பீட்டில் சேர்த்துக்கொள்ளலாம்.

3. தொழில் முனைவோரின் முதலீடு

- பொதுப்பிரிவினருக்கு திட்ட மதிப்பீட்டில் 10% மற்றும் சிறப்புப்பிரிவினருக்கு திட்ட மதிப்பீட்டில் 5%

4. அரசு மூலமாக வழங்கப்படும் மானிய உதவி

- திட்ட மதிப்பீட்டில் 25% அதிக பட்சமாக ரு.25.00 இலட்சம் வரை
- திட்ட செயலாக்கத்தில் வங்கிகள் வழங்கும் கடன் தொகையின் வட்டி விகிதத்தில் 3% வட்டி மானியமாக வழங்கப்படும்.

மேற்கண்ட திட்டங்களுக்கான இந்த மாத நேர்முக தேர்வு 29.07.2017 அன்று முற்பகல் 10.00 மணிக்கு வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெறவிருப்பதால் இம்மாவட்டத்தில் புதியதாக உற்பத்தி மற்றும் சேவை தொழில் நிறுவனங்கள் தொடங்க ஆர்வமுள்ள படித்த இளைஞர்கள் இணையதள முகவரி http://www.msmeonline.tn.gov.in/needs விண்ணப்பித்து, அதன் நகலை இணைப்புகளோடு பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், காந்தி நகர், காங்கேயநல்லூர் ரோடு, வேலூர்-6. (தொலைப்பேசி எண்.0416-2242413, 2242512) அலுவலகத்தில் சமர்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.S.A.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பொது மேலாளர்,
மாவட்ட தொழில் மையம், வேலூர்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர் மாவட்டம்.

பொ.மே/மா.தொ.மை.
வேலூர்- 9.